தமிழ்நாடு வனசீருடைப்பணியாளர்கள் தேர்வுக்குழுமம்
TAMIL NADU FOREST UNIFORMED SERVICES RECRUITMENT COMMITTEE
8வது கீழ்தளம், எண்.01, ஜீனிஸ் சாலை, பனகல்மாளிகை,
சைதாப்பேட்டை, சென்னை–600 015.
8th Down Floor, No.01, Jeenis Road, Panagal Maaligai, Saidapet,
Chennai - 600 015.
Phone No. / தொலைபேசி எண். 044-24341251
Website : www.forests.tn.gov.in Email.id: tnfusrc.tnchn@nic.in

## வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பணியிடங்களுக்கான நேரடி நியமனம்

(விளம்பர எண்.2 / 2019, நாள் 30.11.2019)

## வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பணியிடங்களுக்கான கேள்வி மற்றும் விடை சவால்

தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர்கள் தேர்வுக்குழுமம் 18.03.2020 அன்று வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பணியிடங்களுக்கான கேள்வி மற்றும் விடை சவால்கள் தொடர்பான ஐயப்பாடுகளை நீக்கும் விதமாக வினா–விடைகளை வெளியிட்டது. இது தொடர்பான வழிமுறைகள் பின்வருமாறு :

1) வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவியிடங்களுக்கான இணையவழித்தேர்வுகள் 08.03.2020 அன்று நடத்தப்பட்டது.

2) இணையவழித் தேர்வெழுதிய விண்ணபதாரர்கள் www.forests.tn.gov.in என்ற இணையதளம் மூலம் உள்நுழைந்து, விண்ணப்பதாரர்களால் அளிக்கப்பட்ட பதில்களையும், கேள்விகளுக்கான சரியான விடைகளையும் காணாலம். விண்ணப்பதாரர்கள் விடைகளில் ஏதேனும் தவறைக் கண்டறியும் பட்சத்தில் www.forests.tn.gov.in என்ற இணையதளம் மூலம் உள்நுழைந்து முறையிடலாம்.

3) கேள்வி மற்றும் விடை சவால்களுக்கான சாளரச் சேவையானது 07.10.2020 (காலை 9.00 மணி) முதல் 10.10.2020 (காலை 9.00 மணி) வரை விண்ணப்பதாரர்களுக்கு கிடைக்கும்.

4) விடை சவாலை இணையவழி வாயிலாக மட்டுமே மேற்கொள்ள முடியும்.

5) விண்ணப்பதாரர் ஒவ்வொரு விடைக்கான சவாலுக்கும் இணைய வழி நுழைவாயில் (online payment gateway) மூலம் ரூ.500/– + (அனுமதிக்கப்பட்ட சேவை வரி) செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

6) விண்ணப்பதாரர்களின் விடை சவால் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில், கேள்வி மற்றும் விடை சவால் முடிவுற்ற காலத்திலிருந்து இரண்டு மாத காலங்களுக்குள் மேற்குறிப்பிடப்பட்ட விடை ஒன்றுக்கான ரூ.500/– இணையவழி முறையில் (Online mode) விண்ணப்பதாரர்களுக்கு திரும்ப அளிக்கப்படும்.

7) விண்ணப்பதாரர்களால் முறையிடப்படும் அனைத்து ஆட்சேபனைகள் / சவால்களை கருத்தில் கொண்டு, கேள்வி மற்றும் விடை சவால்களுக்கான இறுதி விடை / முடிவுகளை தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம் (TNFUSRC) வெளியிடும். அதன் பின்னரே இணையவழித் தேர்வுகளுக்கான இறுதி முடிவுகள் வெளியிடப்படும்.

8) தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர்கள் தேர்வுக்குழுமத்தால் இறுதி விடைகள் வெளியிட்ட பின்னர், எந்தவொரு சவால்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

9) விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் (விடைச்சவாலின் படி) தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர்கள் தேர்வுக்குழுமத்தால் 'மூல மதிப்பெண்களாக' கருதப்படும். தகவல் சிற்றேடு பத்தி 17(A) வின் படி நியாயமான மற்றும் கட்டாயமான இயல்பாக்கல் நடைமுறையினால் மதிப்பெண்கள் அதிகரிக்கலாம் / குறையலாம் / மாறாமல் இருக்கலாம்.

10) இயல்பாக்கல் நடைமுறைக்குப் பின் விண்ணப்பதாரர்கள் பெறும் மதிப்பெண் **'இறுதி மதிப்பெண்'** ஆகும்.

11) இது தொடர்பான தமிழ்நாடு வனச்சீருடைப் பணியாளர்கள் தேர்வுக்குழுமத்தின் முடிவே இறுதியானதாகும்.

12) **எச்சரிக்கை:-** விண்ணப்பதாரர்கள் பதில்தாள்களை அச்செடுக்கவோ அல்லது பிரதிகளை மீண்டும் உண்டாக்கவோ என அறிவுறுத்தப்படுகிறார்கள். பதில்தாளானது தமிழ்நாடு வனத்துறையின் அறிவுசார் சொத்துடைமை ஆகும். இதனை எவரேனும் மீறும் பட்சத்தில், மீறுபவர்கள் மீது தக்க சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

குறிப்பு : விண்ணப்பதாரர்கள் www.forests.tn.gov.in இணையதளத்தில் உள்ள 'கேள்வி மற்றும் விடை சவால் – எதிர்பார்க்கப்படும் கேள்விகள் (FAQ)' அறிவிப்பை கவனமாக படிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

நாள் : 03.10.2020 **தலைவர், தநாவசீபதேகு**